1418

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை - 2023

**STP 8305 – கல்வி வழிகாட்டலும் ஆலோசனை நிரலும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 18.11.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதாவது மூன்றிற்கும் (03) விடையளிக்குக.

## பகுதி – I

1. ஆசிரியர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஒப்பீட்டு கல்வி முக்கியத்துவம் பெறுவதற்கான **இரண்டு** (02) காரணிகளை எழுதுக.

2. இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தர் கால கல்வி முறைமைகளை மதிப்பீடு செய்க.

3. 1932 ஆம் ஆண்டின் கிராமப்புறக் கல்வி சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க.

4. 1867 இல் மோர்கன் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட **ஐந்து** (05) பரிந்துரைகளை எழுதுக.

5. 1944 இல் பட்லர் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட **இரண்டு** (02) சாதகமான சீர்திருத்தங்களைச் சுருக்கமாக மதிப்பீடு செய்க.

6. 1981 வெள்ளை அறிக்கையுடன் தொடர்புபட்ட வகையில் **நான்கு** (04) பிரதான சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

7. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் புதிய கல்வியின் போக்குகள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக விளக்குக.

8. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கல்வி முறைமையில் பூகோளமயமாக்கலின் **ஐந்து** (05) சாதகமான தாக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** இலங்கையின் கல்வி முறையில் பண்டைய கல்விமுறை கட்டமைப்பை விளக்குக

**(04 புள்ளிகள்)**

**ii.** பண்டைய இலங்கையில் கல்விமுறைமையின் கற்றல் வளங்கள், கற்பித்தல் முறைகள், கலைத்திட்டத்தின் தன்மை என்பவற்றை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** பண்டைய இலங்கையின் கல்வி முறைமையின் வலிமைகளையும், வரையறைகளையும் மதிப்பீடு செய்க.

**(08 புள்ளிகள்)**

10.

**i.** 1943இல் விஷேட கல்வி ஆணைக்குழுவின் நியமனத்தினை மேற்கொள்வதற்கான சூழ்நிலைகளை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** 1943இல் விஷேட கல்வி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் **ஐந்தினைக்** (05) குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் மேலே குறிப்பிட்ட பரிந்துரைகளில் இலங்கை சமூகத்தில் செல்வாக்கு செலுத்திய பரிந்துரைகளை மதிப்பீடு செய்க.

**(08 புள்ளிகள்)**

11.

**i.** கல்வியில் சமவாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தினை அதிகரிக்கும் செயற்பாட்டின் போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினால் முகம் கொடுக்கக்கூடிய **மூன்று** (03) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

**ii.** சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையில் இன்று வரை இலங்கை அரசினால் கல்விக்கான சமவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான முன்னெடுப்புக்களை மதிப்பீடு செய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** இன்றைய இலங்கையில் கல்விக்கான சமவாய்ப்பினை வழங்குவதிலுள்ள தடைகளை பரீட்சித்து இத்தடைகளை நீக்குவதற்கான **நான்கு (04)** ஆலோசனைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

12.

**i.** "பல் இன சமூகம்" என்ற எண்ணக்கருவை வரையறக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** கல்வியுடன் தொடர்புபட்ட வகையில் பல் இன சமூகமொன்றில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகள் எவை? **இரண்டு** (02) நாடுகளைத் தெரிவு செய்து உங்களது விடைக்கான உதாரணங்களைத் தருக.

**(06 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் பல் கலாசார கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு உங்களது ஆலோசனைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

13.

**i.** "வேலை உலகு" என்ற எண்ணக்கருவை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** வேலை உலகுடன் தொடர்புபட்ட வகையில் 1972 ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்ததின் பரிந்துரைகளை மதிப்பீடு செய்க.

**(08 புள்ளிகள்)**

**iii.** மேலே உங்களால் கூறப்பட்ட பரிந்துரைகள் வெற்றியடையாமைக்கான காரணிகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

14.

**i.** வேலையில்லா பிரச்சினையை இளைஞர்கள் இன்றும் எதிர் நோக்குகின்றனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? உங்களது விடைக்கான **மூன்று** (03) காரணிகளைத் தருக.

**(04 புள்ளிகள்)**

**ii.** இரண்டாம் நிலை கல்வியில் தொழில்நுட்பத்தினை இணைப்பதன் **நான்கு** (04) அனுகூலங்களை பரீட்சிக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு தொழிநுட்பத்தினை கல்வியுடன் தொடர்புபடுத்துவதற்கான **நான்கு** (04) ஆலோசனைகளைக் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -